# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2362/47 - 2023 දෙසැම්බර් මස 13 වැනි බදාදා - 2023.12.13

*2362/47 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 130972 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 10, றைமன்ட் வீதி, நுகேகொடவில் அமைந்துள்ளதுமான "லைசியம் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதாக "லைசியம் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) லைசியம் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் ஆரம்பக் கல்வியில், கல்வியியல் இளமாணி சிறப்பு தொடர்பில் இதற்கான அட்டவணை II இல்


1A - PG 6569 — 286 (2023/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

(அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. இந்நிறுவனமானது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை இல. 10, றைமன்ட் வீதி, நுகேகொட, இலங்கையில் மாத்திரமே நடாத்துதல் வேண்டும்.

3. இந்நிறுவனமானது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படம் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை I**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| ஆரம்பக் கல்வியில் கல்வியியல் இளமாணி சிறப்பு | பீஈடி சிறப்பு (ஆரம்பக் கல்வி) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, திசெம்பர் 11.

EOG 12-0186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.